**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 53/2023 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 4 |
| Name | : | சூர்யா, வயது 23 |
| Father Name/Husband Name | : | ராஜேந்திரன் |
| Village | : | ராமலிங்கபுரம் |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | ஏசி மெக்கானிக் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st day of August 2023.

**(எதிரி ஆஜர்.)**

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது ராமலிங்கபுரத்தில் வசித்து ஏசி மெக்கானிக்காக வேலை செய்கிறேன். கடந்த 21.08.2022 ஆம் தேதி இரவு 10.30 மணிக்கு நானும் கண்ணன் என்பவரும ஜமீன்தேவர்குளம் போய்விட்டு திரும்பி வரும் போது தோனுகால் விலக்கில் இருந்து 100 மீட்டர் தள்ளி நாலாட்டின்புதூர் காவல் ஆய்வாளர் டார்ச் லைட் வெளிச்சத்தில் தேடிக்கொண்டிருந்தார்கள்.
2. பின்னர் எங்களை விசாரித்து சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நாங்கள் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (பார்வை மகஜரில்) உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(அந்த ஆவணம் (பார்வை மகஜர்) அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. விபத்தில் இறந்த ராஜேந்திரன் உங்கள் ஊரைச்சேர்ந்தவர் என்றால் சரிதான். விபத்து பற்றி உங்களுக்கு எப்போது

தெரியும் நாங்கள் வந்து கொண்டிருந்த போது போனில் சொன்னர்கள். விபத்து பற்றி கேள்விப்பட்டு உங்களுக்கு மருத்துவமனை போகவேண்டும என்று தொன்றியதா என்றால் இல்லை.

2. நீங்கள் ஊரில் இருக்கும் போது போலிசார் உங்களை போன் மூலம்அழைத்தார்களா அல்லது நீங்கள் போகும் போது விசாரித்தார்களா என்றால் நாங்கள் செல்லும் வழியில் எங்களை விசாரித்தார்கள். உங்கள் உடன் வந்தவரும் உங்கள் ஊரைச்சேர்ந்தவர் என்றால் சரிதான்.
3. நீங்கள் இருவரும் தனித்தனி வாகனத்தில் போனீர்கள் என்றால் இல்லை ஒரே வாகனத்தில் போனோம். நீங்கள் ஜமீன்தேவர்குளம் போனீர்களா அல்லது இளையரசனேந்தல் போனீர்களா என்றால் ஜமீன்தேவர்குளம் போனோம். உங்களை போலிசார் விசாரணை செய்யும் போது நீங்கள் இளையரசனேந்தலில் இருந்ததாகவும் அங்கிருந்து வந்ததாகவும் சொல்லியுள்ளீர்கள் என்றால் இல்லை.
4. வானரமுட்டி – இளையரசனேந்தல் ரோட்டிற்கு எந்த பக்கம் ஜமீன்தேவர்குளம் உள்ளது என்றால் அந்த ரோட்டின் வடக்கு மற்றும் தெற்கே உள்ளது. ரோட்டினை ஒட்டி உள்ளது என்றால் சரிதான்.
5. சம்பவ இடத்திற்கு மேல் பக்கம் யாருடைய நிலம் உள்ளது என்றால் யாருடைய நிலம் என்று தெரியாது. நீங்கள் பிறந்தது முதல் ராமலிங்கபுரத்தில் தான் இருக்கிறீர்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு கீழ் பக்கம் யாருடைய நிலம் உள்ளது என்று உங்களுக்கு தெரியாது என்றால் ஓடை உள்ளது நிலம் யாருடையது என்று தெரியாது.
6. சம்பவ இடம் ராமலிங்கபுரத்தில் இருந்து எவ்வளவு தூரம் என்றால் ஒருகிலோ மீட்டர். சம்பவ இடத்திற்கும் ஜமீன்தேவர்குளத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும். சம்பவ இடத்தை பார்க்க எத்தனை காவல்துறையினர் வந்திருந்தார்கள் என்றால் நான்கு பேர் இருந்தார்கள் இரண்டு பேர் என்னை விசாரித்தார்கள். இரண்டு பேர் எதையோ தேடிக்கொண்டிருந்தார்கள். என்ன தேடினார்கள் என்றால் எனக்கு தெரியாது.
7. நீங்கள் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். அதன் பின்னர் போலிசார் உங்களை எப்போது விசாரித்தார்கள்

என்றால் 10 நாள் கழித்து விசாரித்தார்கள். நீங்கள் சொன்னது போல் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் போலிசார் அங்கு வரவும் இல்லை என்றாலும் நீங்களும் கண்ணனும் அங்கு போகவும் இல்லை என்றால் சரியல்ல.

8. உங்களிடம் நாலாட்டின்புதூர் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவ இடத்திற்கு போயிருந்தால் சம்பவ இடத்திற்கு வட பக்கம் கீழ் பக்கம் மற்றும் சுற்றியுள்ள நிலங்கள் பற்றி உங்களுக்கு போலிசார் சொல்லியிருப்பார்கள் என்றாலும் நீங்கள் அங்கு போகாததால் உங்களுக்கு சம்பவ இடத்தின் அருகில் உள்ள நிலங்கள் பற்றி தெரியவில்லை என்றால் சரியல்ல.
9. வழக்கில் இறந்து போன நபர் உங்கள் ஊரை சேர்ந்தவர் என்பதாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இனங்க பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றாலும் சரியல்ல.

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.